818

# CS (MAIN) EXAM, 2010

A-DTN-K-JM-21

# TAMIL

## (Compulsory)

*Time Allowed : Three Hours* | *Maximum Marks : 300*

***INSTRUCTIONS***

***Candidates should attempt all questions.***

***The number of marks carried by each question is indicated at the end of the question.***

***Answers must be written in Tamil, unless otherwise directed.***

***In the case of Question No. 3, marks will be deducted if the précis is much longer or shorter than the prescribed length.***

1. கீழ்க் காண்பவற்றுள் ஏதேனும் ஒரு தலைப்பில் ஏறத்தாழ 300 சொற்களில் ஒரு கட்டுரை எழுதுக. *100*

   (a) மதிப்புக் கொலையைச் (Honour killing) சட்டத்தால் தடுக்க இயலுமா ?

   (b) உணவுக் கலப்படம் ஏற்படுத்தும் அச்சுறுத்தல்

   (c) மூடநம்பிக்கை × பகுத்தறிவு

   (d) கல்வியும் சமுதாய மாற்றமும்

   (e) தகவலறி உரிமைச் சட்டம் நேர்மையான நியாயமான நிர்வாகத்திற்கு உறுதியளிக்குமா ?

2. கீழ்க் காணும் பகுதியை கவனமாகப் படித்து விட்டுப், பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக. விடைகள் தெளிவாகவும் சுருக்கமாகவும் அமைதல் வேண்டும். *10×6=60*

புதுப்பிக்கக்கூடிய அனைத்து ஆற்றல்களின் குடைக்கீழ் ஒரு பகுதியாகச் செயல்படும் சூரிய ஆற்றல் ஒன்றுதான் விறகு, கரி போன்ற எரிபொருள்களோடு நமக்குள்ள சார்புத்தன்மையை ஓரளவேனும் குறைக்க வல்லது. இந்த எரிபொருள்களும் கூட ஒரு காலகட்டத்திற்குப் பிறகு விலையேற்றமுடையதாகவும் அரியதாகவும் மாறக்கூடும். நமது கோள்களின் புவிச் சூழல் சமன்பாட்டை நிலைநிறுத்தவும், பச்சைப் பசுமை விளைவு மறைத்துகொண்டே வருவதைத் தடுக்கவும் சூரிய ஆற்றல் முக்கியமான ஒரு காரணியாகும். சூரிய ஆற்றலைப் பயன்படுத்தவது நன்மையையே தரும் என்றாலும் கூட, அது இன்றும் பரவலாகப் பயன்படுத்தப்படவோ, விறகு, கரி போன்ற எரிபொருள்களுக்கு மாற்று எரிபொருளாக

ஏற்றுக் கொள்ளப்படவோ இல்லை. தற்போது புழக்கத்திலுள்ள எரிபொருள்களோடு ஒப்பிடுகையில் இதற்காகும் தொழில்நுட்பச் செலவு அதிகம். இருப்பினும் ஆண்டு தோறும் தொழில்நுட்பத்தில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்க பல முன்னேற்றங்கள் ஏற்படுவதால், சூரிய ஆற்றலுக்கான செலவு வெகுவாகக் குறைந்து வருகிறது. எனவே, கண்டிப்பாக, ஆனால் மெதுவாகவேனும் அது நடைமுறையில் மாற்று எரிபொருளாக ஏற்றுக் கொள்ளப்படும் என்பதில் ஐயமில்லை. அரசு, ஜவஹர்லால் நேரு தேசிய சூரிய ஆற்றல் சேவையகத்தை நிறுவியது, தெளிவான நிலைத்து நிற்கும் ஆற்றலை முன்னிறுத்தித் தொலை நோக்குப் பார்வையுடன் எடுத்து வைக்கப்பட்ட முதல் படி எனலாம்.

எனவே, ஆற்றல் பிரிவு பணிவாய்ப்புகளை உருவாக்கும் நம்பிக்கையைத் தருகிறது. இப்பகுதி ஆய்வு மற்றும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளைச் செய்யவும் பணிவாய்ப்புகளை, அதாவது, உயர்திறன் சார் பணிவாய்ப்புகளை உருவாக்கும்.

இந்தியநாடு, ஆற்றலைப் பொறுத்த வரையில், ஆறாவது இடத்தை, உலக அளவில் பிடித்திருக்கிறது என்றாலும், அது ஆற்றல் நெருக்கடியிலிருந்து இன்னும் மீளவில்லை. சூரிய ஆற்றலால் இந்த நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க முடியும். ஒரு சூழல் அமைப்பு முழுமையாக உருவாகி அதனால் சூரிய ஆற்றலை உருவாக்கும் பிரிவுகளின் தேவை அதிகரிக்கும். சூரிய ஆற்றலை உருவாக்கும் தொழிற் பிரிவுகளை வடிவமைப்பதும், நிறுவுவதும் பொறியமைப்பதும் தான் இன்றைக்கு அதிகமாகத் தேவைப்படும் சூரிய ஆற்றல் தொடர்பான நிலை.

சூரிய ஆற்றல் ஆலைகளின் திறனை மேம்படுத்துவது, உற்பத்திச் செலவுகளைக் குறைப்பது, வடிவமைப்புச் செலவினைக் குறைப்பது ஆகியவற்றின் மூலம் சூரிய ஆற்றலுக்காகும் செலவைக் குறைக்க முடியும். இதனால் இந்த ஆற்றல் தொழில் நன்கு வளரும்.

(a) விறகு, கரி போன்ற எரிபொருள்களோடு நமக்குள்ள சார்புத் தன்மையை ஏன் குறைக்க வேண்டும் ?

(b) சூரிய ஆற்றலைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை என்ன ?

(c) சூரிய ஆற்றலின் பயன்பாடு, மக்கள் செல்வாக்கை இதுகாறும் பெறாதது ஏன் ?

(d) சூரிய ஆற்றல் மக்களிடையே செல்வாக்கு பெறச் செய்யப்படும் செயல்பாடு என்ன ?

(e) சூரிய ஆற்றல் பிரிவு, நம்முடைய இளைய தலைமுறையினருக்கு உயர்தர திறன்சார் பணிவாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவது எங்ஙனம் ?

(f) சூரிய ஆற்றலைக் குறைந்த செலவில் எவ்வாறு உருவாக்க இயலும் ?

3. கீழ்க் காணும் பகுதியை கவனமாகப் படித்து அதன் கருத்துச் சுருக்கத்தை மூன்றில் ஒரு பகுதியாக சுருக்கி எழுதுக. தலைப்பு தர வேண்டிய தேவை இல்லை. குறிப்பிட்ட, சொல் அளவு வரம்பிற்குள் விடை இல்லையெனின் மதிப்பெண் குறைக்கப்படும். சுருக்கப் பகுதிக்கெனத் தனியே தாள்கள் தரப்பட்டுள்ளன. சுருக்கத்தை அவற்றில் எழுதி விடைத்தாளின் உட்புறத்தில் வைத்து நன்கு இணைத்துக் கட்டுக. *60*

குறிப்பிட்ட ஒவ்வொரு காலத்தையும் வெளிப்படுத்தும் வகையில், கலை அமைய வேண்டுமானால், அது கடந்த கால எல்லைகளைத் தளர்த்துவதோடு, பழைய கற்பனையான மனநிலைகளின் எல்லைகளையும் அசைத்துப் பார்க்க வேண்டும். வாழ்க்கை என்பது ஒரு தொடரோட்டம். மாற்றங்கள் விரைவாகவும் பகுத்தறிவு நோக்கிலும் நடக்கும் காலத்தில் ஏற்படும் புரட்சியால் அதன் செயல் வேகம் இன்னும் அதிகமாக முடுக்கி விடப்படுகிறது. அப்படியொரு நேரத்தில், சமூகத் தேவைகள் பண்பாட்டில் ஒரு மேம்பாட்டுப் போக்கினை வலியுறுத்துகின்றன. பழைய வேர்களை அசைத்துப் பார்ப்பது, பழமைக்கும் புதிதாக உருவாகவிருக்கும் போராட்டத்திற்குமிடையே ஒரு முரண்பாட்டை ஏற்படுத்துகிறது. பழைய பண்பாட்டினை

ஆதரித்தோர், இது போன்ற முயற்சிகளினால் ஏற்படும் மாற்றங்களை விரும்பவில்லை. நடைமுறையிலுள்ள இதே நிலை நீடிக்க வேண்டுமென்ற கருத்தில அவர்கள் தங்களை ஒழுக்கம் மற்றும் பண்பாட்டின் காவலர்களாக அறிவித்துக் கொண்டனர். அத்துடன் புதிதாகத் தோன்றிய புதுமை அலைகளைத் தகர்த்தெறிந்தனர். அதே சமயம், மாற்றங்களுக்கு ஆதரவாகப் போராடினவர்கள், பழைய தரப்பாடுகளையும் சட்ட திட்டங்களையும் எதிர்த்துக் கூக்குரலிட்டதைத் தவிர வேறொன்றும் செய்யவில்லை. கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட பண்பாட்டு வடிவம் புதிய சக்திகளையோ உத்திகளையோ. புதிய குறிக் கோள்களையோ பயன்படுத்த இடம்தராத நிலையில் சமுதாய மாற்றத்தின் ஒவ்வொரு கட்டமும் ஒரு பண்பாட்டு வடிவத்தை ஏற்படுத்தின. இப் போராட்டத்தில் பழம் பண்பாட்டினை ஆதரித்தோர் தங்களால் ஒரு காலத்தில் இழிவாகவும் தகுதியன்றெனவும் கருதப்பட்ட நாகரிகமற்ற, இன்னும் சொல்லப் போனால் காட்டுமிராண்டித் தனமான முறைகளைக் கையாண்டனர். எந்தவொரு சக்தியானாலும், அது தன் வளர்ச்சி நிலையை நிறுத்திவிட்டால், அப்போதே அது அடக்கி ஒடுக்கப்படும். பண்பாடு, அறிவியல்

ஆகியவற்றின் அனைத்துத் துறைப் பிரிவுகளும் முழு வளர்ச்சி பெறும் எனும் நம்பிக்கையை ஒரு கலைஞனுக்கு ஒரு புதிய சமூகம் மட்டுமே தர முடியும்.

இன்று வாழ்க்கை யெனும் தொகுப்பு முரண்பாடுடைய சமூகத்தால் சிதறிவிட்டது. அதன் செயல்பாட்டுப் பிரிவு ஒவ்வொன்றும் மற்றொன்றிலிருந்து ஒதுங்கித் தனித்து இயங்குகிறது. தத்துவவாதி அறிவியலாரிடமிருந்து வேறுபட்டு நிற்கிறார்; கலைஞன் பொறியாளரிடமிருந்து ஒதுங்கி நிற்கிறான். துடிப்பு மிக்க, பகுக்க முடியாத வாழ்க்கையெனும் பெரும் வலையமைப்பின் சமன்பாடு, அழகு, முழுமையின் விளிம்புகள் ஆகியவற்றின் முக்கியமான ஆதாரமாகவே ஒவ்வொருவரும் விளங்குகின்றனர். சான்றாக, விறைப்புடைய வெறும் வடிவ வளைவுகளைக் கொண்டது; காற்றையும் புகையையும் உருவாக்குவது; உணர்ச்சிகளற்ற ஜடம் என்றெல்லாம் கருதப்பட்ட வெறும் எந்திரத்தனமான பொறியானது இக்காலத்தில் பழமையோடும் எளிமையோடும் அறிவோடும் இயற்கையோடும் மேலேயுள்ள வான வெளியோடும் தொடர்புபடுத்திப் பார்க்கப்படுகிறது. மேலும் ஒரு கதைத்

தலைவனைப் போல், பண்டைய வரவாற்று நிகழ்ச்சிகள் கொண்ட கதைகளில் இடம்பெறும் கதைத் தலைவனைப்போல வாழவைக்கப்படுகிறது. எந்திரங்கள் மனிதனின் புது உறுப்புகளைப் போல ஆகிவிட்டன. இயற்கையை எதிர்த்து வெல்லுதல், ஐம்பெரும் பூதங்களை அடக்கி ஆளுதல் போன்ற ஆற்றலை மனிதன் பெறுவதை அவை சித்திரிக்கின்றன. இந்தப் போராட்டம் மனிதனோடு ஒத்த பழமையுடையது. இப் போராட்டம் முழுதும் அழகு, சந்தம், இசை, வண்ணத்தால் நிறைந்தது.

மனிதன், தன் பலவீனத்தால், எந்திரத்திற்கு அடிமையாகி விட்டான் என்றால் அது எந்திரத்தின் குற்றமல்ல. எந்திரமென்பது மனிதனால் படைக்கப்பட்டது. அவனால் உருவாக்கப்பட்ட அது, அவனாலேயே அழிக்கப்படவும் கூடும். ஒருவன் தன் பசி தன்னையே விழுங்கும் நிலையில் அதனைப் பழிப்பதுண்டு. ரேடியோ என்பது மனித நுரையீரலின் உருப்பெருக்கம், தொலைபேசி அவன் காதுகளின் உருப் பெருக்கம். விமானத்தைப் பார்த்தும் மாட்டு வண்டியின் கிரீச்சொலியைக் கேட்டும் புருவத்தைச் சுழிப்பது கவிதை மரபாகக் கூட இருக்க முடியாது. அது,

தெளிவான பழமைப் பற்றுடைய பிரிவின் தன்மை. இன்றுள்ள டிராக்டரைப் போலவே ஒரு காலத்தில் கலப்பையும் அற்புதமானதொரு கண்டுபிடிப்பாகத்தான் இருந்தது. மனிதனின் புதிய நடை முறைகளை உருவாக்கும் ஓயாத சலிப்பற்ற திறன்களைப் புறக்கணிப்பது என்பது, சமூகத்தின் மாறும் நியதியையே புறக்கணிப்பதற்குச் சமமாகும். எந்த ஒரு உண்மையான கலைஞனும் அதனைச் செய்ய முன் வரமாட்டான். "ஒரு கலைஞன் உயிரினச் செயல் பாட்டை விட அதிகமாக உருவாக்கு கிறான்" என்பார் மெக்சிகோ நாட்டுக் கலைஞர் ரிவேரா டீகோ. "பூக்களையும் பழங்களையும் உருவாக்கும் ஒரு மரம் ஒவ்வொரு ஆண்டும் அவற்றை இழக்கும் போது, அடுத்த பருவத்தில் மீண்டும் பூப்போம் : காய்ப்போம் என்பதை நினைத்துத்தான் அம்மரம் புலம்புவதில்லை." ஒன்று எத்தன்மைத்து என்பதை மட்டும் கலை உணர்த்துவதில்லை. எப்படி இருந்திருக்கக் கூடும் என்பதையும் உணர்த்த வேண்டும். கலை உணர்த்துவது நெகிழ்ச்சியுடைய சராசரி மனிதனையல்ல; அழுத்தமான உணர்வுடையவனை, தளர்ச்சி ஏற்படுத்தும் வெறும் தோல்விகளையல்ல; தோல்விகளை வெற்றிப் படிகளாக மாற்றும் வழிகளை.

4. கீழ்க் காணும் பகுதியை தமிழில் மொழிபெயர்த்து எழுதுக. *20*

The world does not need extraordinarily talented people. It does not need highly skilled people either. It has plenty of super-intelligent people. We need ordinary people with extraordinary motivation. M.K. Gandhi was an ordinary man with amazing motivation to establish truth and justice. The Wright brothers were ordinary people with a dream of flying.

You can also achieve exceptional results if you are inspired with a higher ideal. Replacing 'inspiration' with 'information' has led to knowledge being viewed as drudgery rather than as pleasure. Education has degenerated to data being transmitted from the teacher to the taught without igniting the minds of the young with a higher purpose.

How many of us wake up inspired, looking forward to a day of service ? Who among us finds exhilaration in contributing to society ? Life changes magically from boredom to excitement when you are inspired to serve. You redefine norms and achieve the impossible, paving the way to outstanding success. You find happiness at work, not in escaping from it. Most importantly, you evolve spiritually and attain Godhood.

Inspiration gives ordinary people the courage and hope to make life better for themselves and for posterity. Find inspiration and life will transform into an exciting adventure of self-discovery.

5. கீழ்க் காணும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக. *20*

அறிவியலின் சமூகப் பொறுப்பினைப் பற்றி இன்று பேசும் போது, இளைய சமூகத்தால் எளிதாகப் புரிந்து கொள்ளக் கூடியதும், பொதுவாக, முதியோரால் சற்றுக் கடினப்பட்டே புரிந்து கொள்ளக் கூடியதுமான சிலவற்றைப் பற்றியும் பேசவிருக்கிறேன். இளைஞர்களிடம் உள்ள ஒரு திறன், அதுவும் காலம் செல்லச் செல்லக் குறைந்து சொண்டே வரும் ஒரு திறன் கற்பனைத் திறன். கற்பனைத் திறன் என்பது அறிவியலோடு இணைந்த ஒரு திறன். அது இளைஞர்களிடம் இயல்பாகக் காணப்படும் ஒன்று. இப்பண்பு, வயது முதிரும் போது கரைந்து போவது வருந்தத் தக்கது. இருப்பினும் இக்காலத்தில், எதிர்பார்ப்புகளைக் கொண்ட நம் உலகத்திற்கு இத்திறன் அதிகமாகத் தேவைப்படும் ஒன்று.

கடந்த மூன்று ஆண்டுகளாக. அறிவியல் கண்டுபிடிப்புகள் சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. ஆனால் நம் உலகம் எவ்வாறு பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை மனிதர்கள் பொதுவாக அறிந்து கொள்வதுமில்லை; அதைப்பற்றிக் கவலைப்

படுவதுமில்லை. நியூட்டன் காலத்திலிருந்து, அறிவியல் கண்டு பிடிப்புகளை அடியொற்றிய தொழில் நுட்பத்தில் குறிப்பிடத்தக்க அளவு வசதிகளும் பயன்களும் கிடைக்கும் என்பதை மனிதன் உணரத் தொடங்கினான். அறிவியலை மருத்துவத்திற்குப் பயன்படுத்துவதன் மூலம் தாங்கள் இன்னும் அதிககாலம் உயிர்வாழ முடியும் என்பதையும் உணரத் தொடங்கினர்.

லியனர்டோ டாவின்சியின் காலத்திலிருந்து, போரில் வெற்றி கொள்ள அறிவியல் கண்டு பிடிப்புக் கருவிகள் உதவுகின்றன என்பதை மக்கள் உணர்ந்து பாராட்டினர். காலஞ் செல்லச் செல்லத் தொழில் நுட்பப் பொருள் முதல் வாதம் உருவாகியது; புதிய தொழில் நுட்ப அறிவுகள் மேன் மேலும் வளர்ந்தன. மக்கள் இன்னும் அதிக அளவில் அறிவியலாராகவும் தொழில் நுட்பராாகவும் உருவாகினர்.

6. (a) கீழ்க் காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக : 5

(i) வாழையடி வாழை

(ii) முதுமை

(iii) வன்முறை

(iv) கருணை

(v) விருந்து

(b) கீழ்க் காணும் சொற்களைப் பிரித்து எழுதுக. 5

(i) பன்னெடுங்காலம்

(ii) மக்கட்டொகை

(iii) நீராழம்

(iv) அறுவகை

(v) ஒட்டுவீடு

(c) கீழ்க் காணும் சொற்களுக்கு எதிர் சொற்கள் எழுதுக. 5

(i) அன்பு

(ii) வெளிச்சம்

(iii) இரவு

(iv) புதுமை

(v) தீமை

(d) கீழ்க் காணும் சொற்களில் பிழை இருப்பின் திருத்தி எழுதுக. 5

(i) குறைத்தது நாய்

(ii) பரிமானம்

(iii) எண்ணை

(iv) அந்நாளில்

(v) விளக்கிக் கொழ்கிறேன்

(e) கீழ்க் காணும் சொற்களின் பொருள் வேறுபாட்டினை ஏற்ற சொற்றொடர்களில் அமைத்துக் காட்டுக. *10*

(i) உறி — உரி

(ii) தளை — தழை

(iii) கோலம் — கோளம்

(iv) நீர் — தண்ணீர்

(v) கானம் — காணம்

(f) கீழ்க் காண்பவற்றுள் ஏதேனும் ஒரு தொடரை விளக்கி ஐந்து சொற்றொடர்களில் ஒரு பத்தி எழுதுக : *10*

(i) செம்மொழி

(ii) செல்வம்